# தமிழ் முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

முரசு: 3 – ஒலி: 6

1985 சித்திரை

TAMOUL MOUROUSSOU



மனித உயிர்களின் மரண ஊர்வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு - 42

## போராட்ட நடவடிக்கைகளா..? புல்லுருவிகளின் சதிகளா...?

அவலங்கள், அடக்குமுறைகள், கொள்ளைகள், கொலைகள், கற்பழிப்புக்கள் ... என்றெல்லாம் ஆக்கிரமிப்பாளர்களின் காலடித் தடங்கள் பட்ட இடத்திலெல்லாம் ஈழமக்கள் தங்கள் பாசபூமியில் குருதியைப் படரவிட்டு வெந்து தவித்து வேதனையால் தகித்து வந்த போதும், இத்தனை கொடுமைகளையும் மீறி அவர்களது உள்ளத்தின் ஒரு மூலையில் நம்பிக்கை தளிர் ஒன்று துளிர்த்து நின்றது. அடக்குமுறை இருளைக் கிழித்து போராளிகள் விடுதலைச் சூரியனைப் பிரசவிப்பார்கள்... அடிமை விலங்குகளை அவர்கள் அறுத்தெறிவார்கள் என்று. ஆனால் இன்று ஈழதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் அந்த நம்பிக்கைத் தளிரைக் கருக்கிவிடுமோ என்ற ஐயம் கிளம்பத் தொடங்கியுள்ளது.

அடிமைப்படுத்தப்பட்ட எமது தேசத்தில் இன்று ஆக்கிரமிப்பு வெறிநாய்கள் இழைத்துவரும் கொடுமைகளால் கோரத்தனமாக வதைபடும் ஈழமக்கள் இப்போது இயக்கங்கள் என்ற பெயரில் சதிக்கூட்டங்கள் நடத்திவரும் நாசகார வேலைகளால் நம்பிக்கையிழந்தும் சிதைக்கப்பட்டவர்களாக நடைப்பிணங்களாக மாறியுள்ளனர்.

ஈழமக்களுக்கு பெருமையூட்டிய கல்விக் கூடங்கள் சதியாளர்களின் தொடர்ந்த தொல்லைகளால் மூடப்படும் நிலைக்கு வந்துவிட்டன. இதனால் ஈழமாணவர்களின் கல்வி முற்றாகவே நாசமடையும் நிலை நெருங்கிவிட்டது. தனியாரின் சொத்துக்கள், சிறுவர்த்தகர்களின் உடைமைகள், தொழிலாளரின் சம்பளப் பணங்கள், முதியவரின் இளைப்பாறியப் பணங்கள் இவை மாத்திரம் இந்தப் புல்லுருவிகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொள்ளையிடப்படவில்லை. தொழிற்சாலைகளின் உபகரணங்களைக் கூடக் கொள்ளையிட்டு ஏழைத் தொழிலாளர் பலரைக் கண்ணீரில் வாடவிடுகிறார்கள். இந்த அக்கிரமங்களின் சிகரமாக ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைச் சின்னமான ஆலயம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது; மக்களின் உயிர்காக்க இருந்த வைத்தியசாலையில் மருந்துகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது; மக்களின் அத்தியாவசிய சேவைக்குரிய வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளன. அனைத்துக்கும் மேலாக நமது சொந்த மண்ணிலேயே எமது மக்கள் பணயக் கைதிகளாக கடத்தப்படும் அவலம்.

இந்த அக்கிரமங்களைப் புரிபவர்கள் யார்? அடக்குமுறைத் தீயில் சுட்டுப் பொசுக்கப்படும் எமது மக்களை மேலும் மேலும் வதைப்பவர்கள் யார்? சரியான அரசியல் தத்துவார்த்த அணுகுமுறை இல்லாமல் எடுத்தமாத்திரத்தில் துப்பாக்கியைத் தூக்கியவர்களின் கட்டுப்பாடற்ற செயல்களா...? அல்லது தலைமைக்குப் பணியமறுத்து தான்தோன்றித்தனமாக வெறியாட்டம் ஆடும் வீணர்களா...? அல்லது எரிகின்ற வீட்டிலே பிடுங்குவதைப் பிடுங்க முற்படும் கொள்ளையர் கூட்டமா...? அல்லது விடுதலைப் போராளிகளின்மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதற்காக கட்டவிழ்க்கப்பட்டுவிடும் திட்டமிட்ட சதிகளா?

இதில் எதுவாக இருந்தாலும் இதைக் கண்டுபிடித்து ஈழ மக்களின் துயரச் சுமைகளைக் களையும் பொறுப்பு ஈழ விடுதலை இயக்கங்களையே சார்ந்தது. ஈழ மக்களின் துயரச் சுமைகளை மாத்திரமல்ல தம்மீது படிந்துள்ள களங்கத்தைக் களைந்து ஈழ மக்களை நம்பிக்கையுடன் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க அணிதிரட்டும் பணியை தமது முதற்பணியாக அனைத்து இயக்கங்களும் செய்ய வேண்டும். இதுவே எமது வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஈழ அகதிகளின் கண்ணீரில் பாக்குநீரிணை உவர்ப்பாகிறது



வெறி பிடித்த சிறீலங்கா இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டு, உடைமைகள் அனைத்தும் சிறீலங்கா வெறிநாய்களால் சூறையாடப்பட்டு அல்லது துவம்சம் செய்யப்பட்டு இருப்பதற்கு எதுவுமில்லாதவர்களாய் வரும் வழியில் வேட்டைநாய்களாய் வலம் வரும் சிறீலங்கா கடற்படையினரிடம் உயிரைக்கூட இழக்கத் துணிந்தவர்களாய் கொடிய கரங்களிலிருந்து தப்பிப் பிழைத்து இந்தியக் கரையினிலே இறங்கின்ற ஈழ அகதிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இதுவரை ஏறத்தாழ 14,000க்கும் மேற்பட்டோர் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் ஈழ அகதிகளின் மொத்த எண்ணிக்கை 80,000த்தைக் கடந்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாலை, மன்னார், முருங்கன் பகுதிகளைச் சேர்ந்த மக்களோ பெருமளவில் அகதிகளாக வருகின்றனர். மக்களின் தொழில்கள் பறிக்கப்பட்டு, அவர்களின் கண்களின் முன்னாலேயே அவர்களது பிள்ளைகளின் நெஞ்சங்கள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டு... அவர்களது பெண்கள் கற்பழிக்கப்பட்டு .... வருகின்ற அவலங்களையெல்லாம் பொறுக்க முடியாது பாசபூமியையும், நேச உறவுகளையும் விட்டு




விட்டு கண்ணீரும் கம்பலையுமாக ஆண்கள், பெண்கள், முதியோர்கள், கர்ப்பிணிகள், மழலைகள் என ஆயிரக்கணக்கானோர் அணிந்த ஆடைகளுடனும் அந்த கண்களுடனும் வந்திறங்கும் சோகக் காட்சி அடக்குமுறையாளர்களின் வன்முறைத் தீனப் பசியெல்லாம் எங்கள் மக்களைச் சுட்டெரித்திருக்கிறது என்பதை சுற்றி நிற்கும் கோலமும் சுவடே தெரியாது மகிழ்வும் காட்டுகிறது.

அகதிகளின் சோகக் கதைகள் ஒன்று இரண்டா. சொந்த மண்ணில் மட்டுமல்ல சொந்தவீடுகளிலும் வாழ முடியாது. சுமந்த பிள்ளைகளின் உயிரோடு பார்க்க முடியாது. கண் முன்னாலேயே கற்பழிப்புக்கள். மீன்பிடித் தொழிலில்லை, விவசாயம் இல்லை, வர்த்தகம் இல்லை இவை ஏதும் இல்லாததால் உண்பதற்கு உணவில்லை. அடுத்த வேளை உணவைத் தேடும் வயிறு அச்சத்தால் வாடி நிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனது. எந்த நேரமும் வெறிநாய்கள் வீட்டுக்குள் புகலாம். துப்பாக்கிக் குண்டுகள் நெஞ்சைத் துளைக்கலாம் இருக்கின்ற வழி ஒன்றுதான் என்று மரணத்தைச் சந்திக்கத் துணிந்து. அகப்பட்ட படகுகளில் ஏறி அகதிகளாகும் ஈழ மக்கள்.



எங்கே இவர்கள் இருவோர்கள் எனப் பார்த்து இராணுவமுடன் வீடுகளை வெடிகுண்டு வைத்துத் தகர்த்து புதிய சிங்களக் குடியேற்றத்துக்கு அத்திவாரம் போட்டு அரசமரம் நாட்டி பண்டைய வரலாற்றில் மன்னார் சிங்களக் கிராமமாக இருந்தது என புதிய சரித்திரம் படைக்கும் பேரினவாத அரசாங்கம்.

கண்ணீரும் செந்நீருமாய் கலங்கிநிற்கும் பாக்கு நீரிணை தொலைவுடைய ஒரே வழி சுதந்திரமான ஈழ தேசத்தின் உதயம்தான். எனவே போராட்டத்தை உறுதியாக இறுதியாக முடுக்கிவிடுவோம். ஐக்கியப் படுவோம். போராடுவோம். வெற்றி பெறுவோம். அகதிகளின் கண்ணீரை நிறுத்தும் ஒரேவழி இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## கிளிநொச்சி பொலிஸ் - இராணுவ கூட்டு முகாம் - மீது மக்கள் விடுதலைப் படை வெற்றிகரத் தாக்குதல்.

தொடர்ச்சியாக ஈழமக்களைக் கொன்றொழித்துவரும் சிறீலங்காவின் ஆக்கிரமிப்புப் படையினருக்கு எதிராக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படை (PLA) மேலும் ஒரு பாரிய தாக்குதலை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது. 28.02.85 அன்று இரவு ஒரு மணிக்கு கிளிநொச்சி பொலிஸ் இராணுவ கூட்டுமுகாம் மீது மக்கள் விடுதலைப் படையினர் சுயமாகவே தம்மால் தயாரிக்கப்பட்ட மோட்டார் குண்டுகளால் தாக்குதல் நடத்தினர். இம் முகாமில் இருந்த 80 இராணுவம், 40 அதிரடிப்படை, 20 பொலிசாரில் 75 மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். கட்டடங்கள் சேதமுற்று அழிந்து போயின. 5 மணித்தியாலத்துக்கு மேல் நீடித்த போரில் போராளிகள் எவருமே பாதிக்கப்படவில்லை. இந்த இராணுவ முகாமிற்கு எவ்வித உதவியும் வராத வகையில் வீதிகளில் கண்ணிவெடி புதைக்கப்பட்டது. சிறீலங்கா ஆக்கிரமிப்பாளருக்கெதிராக மிக நீண்ட நேரம் நடத்தப்பட்ட தாக்குதலாகக் கருதப்படும் இத்தாக்குதல் பற்றி லலித் அத்துலத் முதலி "தாக்கிவிட்டு மறையும் பாணி கைவிடப்பட்டு நேருக்கு நேர் மோத முயலும் ஒரு புதிய தாக்குதல் நடவடிக்கையையே கிளிநொச்சித் தாக்குதல் எடுத்துக் காட்டுகிறது' எனக் கூறியுள்ளார்.

ஈழபூமியை சுடுகாடாக்க முயலும் சிறீலங்கா வெறி நாய்களுக்கெதிரான எமது புரட்சிகர பாதை முன்னெடுப்புக்கள் வெறி நாய்கள் எமது பாசபூமியை விட்டு நீங்கும்வரை ஓயாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தில் தொழிலாளர் போராட்டம் புது-
## முனைப்பெடுக்கிறது.

* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து ஆயுதப் படையினர் முற்றாக மீளப் பெறப்பட வேண்டும்.
* சிவில் நிர்வாகம் வட, கிழக்கில் ஏற்படுத்தப்பட வேண்டும்.
* ஆயுதப்படையினரால் கொல்லப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் உட்பட பாதிக்கப்பட்ட அனைவருக்கும் போதிய அளவு நஷ்டஈடு வழங்க வேண்டும்.
* கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சகலரையும் விடுதலை செய்ய வேண்டும்.
* வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களால் ஏற்கக் கூடிய அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வகையிலான தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டும்.

என்ற கோரிக்கைகளை முன்வைத்து அரச அடக்குமுறைச் சட்டங்களை மீறி வடபகுதியிலுள்ள 13 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 15,000 க்கும் அதிகமான தொழிலாளர்கள் மார்ச் 21 அன்று 10 மணி தொடக்கம் 11 மணி வரை மேற்கொண்ட அடையாள வேலை நிறுத்தம் பூரண வெற்றியை அடைந்துள்ளது. இவ் வேலை நிறுத்தத்தில் ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், வினைஞர்கள், தொழிலாளர்கள், போக்குவரத்துச் சபை ஊழியர்கள், தாதிமார்கள், தொலைத் தொடர்பு ஊழியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## "தமிழர் படுகொலையை நாம் கண்மூடிப் பார்த்திருக்க முடியாது" - கர்நாடக முதல்வர்.

'இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் போது நாம் கண்களை மூடிக்கொண்டிருக்க முடியாது' என கர்நாடக முதல்வர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார். 'இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தென்னக மாநிலங்களின் முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டுமாறும் திரு. ஹெக்டே இந்தியப் பிரதமரைக் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரான ஈழ விடுதலை இயக்கங்களின் தாக்குதல்கள் முடுக்கப் படுகின்றன.

ஈழதேசத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படையினருக்கெதிரான விடுதலைப்போராளிகளின் தாக்குதல்கள் பாரிய அளவில் முடுக்கிவிடப் பட்டுள்ளன. இதனால் சிறீலங்கா படைகள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் பீதியால் நிலைகுலைந்தும் உள்ளன.

28.02.85 அதிகாலை கல்லுண்டாய் வெளியில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் கண்ணிவெடித் தாக்குதலில் 4 சிறீலங்கா இராணுவ வாகனங்கள் தகர்க்கப்பட்டு பலத்த உயிர்ச்சேதமும் ஏற்பட்டுள்ளது.

மதவாச்சி பொலிஸ் நிலையத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 9 பொலிசார் கொல்லப்பட்டதாகவும், இதையடுத்து மதவாச்சி புகையிரத நிலையத்தின் மீது நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் மேற்படி நிலையம் தகர்க்கப்பட்டுள்ளதாகவும் புலிகளின் செய்திக் குறிப்புக் கூறுகின்றது. அதே வேளையில் பருத்தித்துறைக் கடலில் வைத்து ஹெலிகொப்டர் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியுள்ளதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

## துர்க்கை அம்மன் ஆலயக் கொள்ளை – ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கண்டனம்.

இன்று ஈழத்தில் நிகழும் சில சம்பவங்கள் எம்மைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே நடந்து கொண்டிருக்கின்றன. இவை சில விடுதலை இயக்கங்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய தவறான புரிதலையும் அதே வேளை இன்றைய சூழ்நிலையைப் பயன்படுத்தி தமது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயன்று வரும் சில கொள்ளைக் கூட்டத்தினரின் செயற்பாடுகள் இங்கு வருவதாலும் நிகழ்கின்றன. எனவே இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு சகல விடுதலை இயக்கங்களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறிருக்கையில் கூடவும்... அண்மைக் காலங்களில் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், பொது மக்களின் வீடுகள், கூட்டுறவுச் சங்கங்கள், வைத்திய சாலைகள், நகைக் கடைகள், பலசரக்குக் கடைகள், கோயில்கள் ஆகியவற்றில் இடம் பெற்ற கொள்ளைகளுக்கும், எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதை மக்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகிறோம். அதே சமயம் எமது ஸ்தாபனத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எம்மைப் பற்றிய தவறான பிரச்சாரத்தை சிலர் மேற்கொள்வதாக அறிகிறோம். எமது பெயரைச் சொல்லி யாராவது கொள்ளையில் ஈடுபட்டால் அவரைக் கையும் மெய்யுமாகவோ, இல்லையேல் தகுந்த ஆதாரங்களுடனோ எங்களிடம் ஒப்படைத்தால் அவர்களை மக்கள் முன்னிலையில் நிறுத்தி தண்டனை வழங்குவோம். தெல்லிப்பளை துர்க்கா தேவி அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடந்த மோசமான கொள்ளையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இவை ஏதாவது ஒரு இயக்கத்தால் நடத்தப்பட்டிருந்தால் இவர்கள் மக்களின் கலாச்சார உணர்வுகளைப் புறக்கணித்து கண்மூடித்தனமான முறையில் செயற்படுகிறார்கள் என்றே நாம் கருதுகிறோம். மக்களின் விடுதலை மீதான நம்பிக்கையை வளர்ப்பதற்குப் பதில் அவர்களை விரக்திக்கு இட்டுச் செல்லவே இது வழிவகுக்கும். அத்துடன் இக்கொள்ளைக்குக் காரணமாக ஏதாவது ஒரு இயக்கமோ அல்லது கொள்ளைக் கூட்டமோ இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து மக்கள் முன் நிறுத்த எமது இயக்கம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போல மேற்படி முன்னணியின் இன்னுமொரு பிரசுரம் விடுதலை இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்ட கீழ் மட்டத் தோழர்களின் கண்மூடித்தனமான அணுகுமுறைகளால் புனித இயக்கங்களின் செயற்பாடுகள் களங்கப்படுவது குறித்து கவலை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் கண்டு தமிழகம் துணைநிற்கிறது.

ஈழமக்களுக்கு சிறீலங்கா அரசு இழைத்துவரும் கொடுமைகள் தமிழக மக்களை பொங்கியெழச் செய்துள்ளது.

* சென்னையில் 150க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஈழமக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை உடனடியாக நிறுத்துமாறு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
* ஈழமக்களின் பிரச்சினையில் தலையிட்டு உடனடியாகத் தீர்வுகாணுமாறு கோரி தொடர்ந்து பல்பாடசாலைகள் மாணவர்களினால் பகிஷ்கரிக்கப்பட்டு வருகின்றன.
* கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கோரி தமிழ்நாடு சட்டசபையில் விவாதில் அனைத்துக் கட்சிகளின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
* இவ்வினப்படுகொலையை நிறுத்த இந்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி கோயம்புத்தூர் பொறியியலாளர் மற்றும் பொதுத்தொழிலாளர் சங்க எட்டாவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
* இந்திய மீனவர்கள் மீதான சிறீலங்கா கடற்படையினர்களின் தாக்குதல்களைக் கண்டித்து 200க்கும் மேலான இந்திய மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.
* ஏப்ரல் 29 தொடக்கம் தினசரி மறியல் போராட்டத்தினை ஆரம்பிக்கப் போவதாக திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.
* முதறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் இந்தியப் பாராளுமன்றத்தின் முன்றல் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.
* கச்சதீவை நோக்கி ஏராளமான படகுகளில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியின் இலங்கை விஜயம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கைக்கு வந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி புதுடில்லி திரும்பியுள்ளார். இப்பேச்சுவார்த்தைகளில் எவ்வித இணக்கமும் காணப்படவில்லை. தமிழ் மக்களது பிரச்சினையை அரசியல் கண்ணோட்டத்தில் அணுகாமல் மக்கள் கண்ணோட்டத்தில் அணுக வேண்டும் என்று வற்புறுத்திய திரு பண்டாரி, 'அரசியல் தீர்வு காண வேண்டும் என்று தான் பலரும் சொன்னார்கள், ஆனால் தீர்வுக்கான நியாயமான திட்டத்தை யாரும் முன் வைக்கவில்லை. இதனையும் நான் அவதானிக்கக் கூடியதாக இருந்தது' என்றும் கூறியுள்ளார்.

## தொண்டமானின் முகத்திரை கிழிகிறது.

'நல்லவர்', 'வல்லவர்' என தமிழ்த்தலைவர்களின் அன்புக்குப் பாத்திரமானவரும், ஜெயவர்த்தனாவின் அரவணைப்பையும், இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களைச் சுரண்டி வருபவருமான தொண்டமானின் முகத்திரை கிழியத் தொடங்கியுள்ளது. ஈழப்போராளிகள் தமது ஆயுதப்போராட்டத்தை நிறுத்தும் வரை 'தமது அரசு' இராணுவ அடக்குமுறையை நிறுத்தாது என்றும், இந்தியா வரவேற்பதால்தான் தமிழ்மக்கள் அகதிகளாக ஆயிரக்கணக்கில் இந்தியா செல்கிறார்கள் என்றும் விளக்கியுள்ளார்.

## போராளிகட்கு வீரவணக்கங்கள்.

நெல்லியடியில் எதிரிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிய தமிழீழ விடுதலை இயக்கத் தோழர்கள் பாலகுமார், சித்தர் ஆகியோருக்கும், கொக்கிளாய் இராணுவமுகாம் தாக்குதலில் வீரமரணம் அடைந்த விடுதலைப்புலி இயக்கப் போராளிகள் 16 பேருக்கும், மற்றும் வீரமரணமடைந்த அனைத்துத் தோழர்கட்கும் எமது வீரவணக்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ★ ★ தோழர் செர்னென்கோ



United Press International

**Konstantin Ustinovich Chernenko, 1911-1985**

சுரண்டல் சதியாளரின் சதிகார சாம்ராச்சிய வேரினைக் கிழித்து ஒளிர்ந்த சிவப்பு நட்சத்திரமாகிய சோவியத் யூனியனைச் சதிகள் சுற்றி வளைத்திருந்த இக்கட்டான சூழ்நிலையில் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்தான் தோழர் செர்னென்கோ.

தலைமைப் பொறுப்பு இவருக்கு வானத்திலிருந்து வந்து விழுந்ததல்ல. பாட்டாளிக் குடும்பத்தில் பிறந்து சாதாரண தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடர்ந்து செம்படையின் போர் வீரனாக... கம்யூனிஸ்ட் கட்சியின் சாதாரண அங்கத்தவராக... தோழர் பிரஷ்னேவின் உதவியாளராக, கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு உறுப்பினராக படிப்படியாக உயர்ந்து இறுதியில் சோவியத் மக்களின் தலைவரானவர் தோழர் செர்னென்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மிகக் குறுகிய காலமே பதவியிலிருந்த போதும் இவரது பதவிக்காலத்தில் சோவியத் யூனியனின் அரசியல், பொருளாதார வளர்ச்சியின் உறுதியாகவே அமைந்திருந்தன. உலகப் பாட்டாளிவர்க்கத்தினதும், ஒடுக்கப்பட்ட மக்களதும் நண்பனான தோழர் செர்னென்கோவிற்கு ஈழ மக்களின் சிவப்பு வணக்கங்கள்.

## தோழர் கொர்பச்சேவ்

சோவியத் மக்களின் ஏழாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் தோழர் கொர்பச்சேவ் சக்தி மிக்க, அரசியல் திறன் வாய்ந்த இளையவராவர். தோழர் கொர்பச்சேவுக்கு ஈழமக்களின் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரது உறுதியான கொள்கையை வலியுறுத்தும் உரையை இங்கே தருகிறோம்......

* "....சமாதானப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதும் காலனித்துவ ஆதிக்கத்தை அறுத்தெறிந்து விடுதலைப் போராட்ட நாடுகளுக்கு ஆதரவளிப்பதும் சோவியத் யூனியனின் பிரதான இலட்சியங்களாகும். எல்லா நாடுகளுடனும் நட்புறவைப் பேணும் அதேவேளையில் உலக சமாதானத்துக்கு எத்தகைய உருப்படியான ஆலோசனைகளை யானாலுமோ அவற்றை ஏற்றுக்கொள்வதே சோவியத் யூனியனின் கொள்கையாகும். இதைத்தான் சோவியத் யூனியன் தனது வெளிநாட்டுக் கொள்கையாகவும் கொண்டுவருகிறது...."

☆ "....காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போராடும் நாடுகளுக்கு சோவியத் யூனியன் என்றுமே ஆதரவளித்து வந்திருக்கிறது. இன்றும் சுதந்திரத்துக்காகவும், சமூக விடுதலை எழுச்சிக்காகவும் போராடும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மீதும் சோவியத் யூனியனின் அனுதாபம் தொடர்ந்தும் இருந்துவரும். சமாதானத்தையும் அமைதியையும் காண்பதற்கு நீண்ட போராட்டம் நடத்தும் அந்நாடுகள் எமது நட்பு நாடுகளாக இருப்பதால் எமது அனுதாபமும் ஆதரவும் அவற்றில் தங்கியிருக்கும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி.

# புதிய கலிடோனியாவின் இனஅழிப்பு ஒரு பிரஞ்சுச்சதி! சில உண்மைகள்!

## கனக்கிக்ள் போராட்டம் தொடர்கிறது.

தேசிய இனம் என்ற பெயர் கனக்கிகளுக்கு இருந்தாலும், தீவில் "அரசபோக" வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவர்கள் கல்டோஸ்கள்தாம். அவர்களது கரங்கள் ஆயுதங்களைத் தூக்க எப்போதுமே பயந்ததில்லை. ஊக்கம் கொடுக்க இராணுவம் வேறு அவர்கள் பக்கம் எப்போதுமே இருந்தது. கல்டோஸ்களே "சலுகைகள் அநுபவிப்பு" என்ற வார்த்தைகளின் சரியான அர்த்தத்தைப் புரிந்தவர்கள்.

1972 ம் ஆண்டு பிரான்சில் உள்நாட்டு அமைச்சராக இருந்த பியர் மெஸ்மேர் இதனை – "புதிய கலிடோனியாவில் தனியார் துறையில் உள்ள சகல தொழில் வாய்ப்புக்களும் வெள்ளைக் குடிவரவுகளுக்கே ஒதுக்கப் படவேண்டும்" –என அப்பட்டமாக ஊர்ஜிதப் படுத்தியுள்ளார்.

*** ஜேன்–மேரி தீஜிபோவைத் தலைவராகக் கொண்ட கனக் சோசலிச தேசிய விடுதலை முன்னணி (FLNKS)யே இன்று விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றது. கனக்கிகளின் தற்காலிக அரசாங்கத்தை (கனக்கி தேசம்) கடந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதி இக் கட்சி பிரகடனப்படுத்தியது. கட்சித் தலைவரான திஜிபோவே கனக்கியின் ஜனாதிபதியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். 49 வயதான திஜிபோ முன்னாள் கத்தோலிக்க போதகராவார்.

கடந்த டிசம்பர் மாதம் கல்டோஸ்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதம் இதுவரை 18 பேருக்கும் மேற்பட்ட கனக்கிகளை பலியெடுத்திருக்கின்றது. இதில் திஜிபோவின் சொந்த 2 சகோதரர்களும் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*** கிருண் தெர் - கலிடோனியாவின் பிரதான தீவுகளில் இதுவும் ஒன்று. இதனது மேற்குக் கரைப்பக்கமாக உள்ள லாபோ என்னும் இடத்தில் கடந்த ஜனவரி மாதம் 12 ம் திகதி திடீரென்று துப்பாக்கி வேட்டுக்கள் முழங்கின. சத்தம் கேட்ட இடத்தில் இரண்டு விடுதலைப் போராளிகளின் உடல்கள் துடிதுடித்துவிழுந்தன. ஒருவர் எலுவா மசூரே; மற்றவர் மார்சல் நோனூரே. கனக்கிகளின் போராட்டத்தில் மசூரேவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அவர் தற்காலிக அரசின் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப் பட்டிருந்தார்.

திக் உக்வேயைத் தலைவராகக் கொண்ட கலிடோனிய அரசு 18.11.1984 இல் பொதுத்தேர்தலை நடாத்தியபோது மசூரே தனது தொகுதியான தியோவில் அமைக்கப் பட்ட வாக்குச் சாவடியை நோக்கி கோடரியுடன் சென்றது குறிப்பிடத்தக்கதாகும். அத் தேர்தல் கனக்கிகளைப் பொறுத்த வரையில் அர்த்தமற்றது என்பதை உணர்த்துமுகமாகவே அவ்வாறு நடந்து கொண்டார்.

மசூரேவும் நொனூரேவும் நிரபதிகளாக தமது உயிரை இழந்திருக்கின்றனர். ஆயுபாணியில் நின்ற பிரான்சு இராணுவத்தினரை நோக்கி பேச்சுவார்த்தைக்கு நிராயுதபாணியாக சென்ற வேளையிலேயே மசூரே சுடப்பட்டார் என்ற செய்தியை நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தன. மசூரேவின் படுகொலை கனக்கிகளின் போராட்டத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இக்கொலை திட்டமிடப்பட்ட ஒன்றாகும். மசூரேமறைவின் பின் - "இனிமேல் எங்களது கோரிக்கையின் அடிப்படையில்தான் பிரான்சுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவோம், அவர்களது திட்டங்களின் அடிப்படையில் அல்ல" என சூட்டோடு சூடாக அறிவித்திருக்கிறார் தீபோ.

தீவில் கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைக்கான தீர்வொன்றை ஆராய்ந்து எடுப்பதற்காக பிரான்சு அரசு விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதியாக எட்கர் பிசானியை கலிடோனியாவிற்கு அனுப்பியிருக்கிறது. சுதந்திரம் வழங்குவதுதான் பிரச்சனைக்கான ஒரேயொரு தீர்வு என்பதை ஏற்றுக்கொண்டிருக்கும் பிசானி அது பிரான்சுடன் கூட்டாக அமைந்ததாக இருக்கவேண்டும் என்றும் அந்தச் சுதந்திரத்திற்கான முடிவு சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் பிரகடனப்படுத்தப் படவேண்டும் என அறிவித்திருந்தார்.

பிரான்சுக் கூட்டுடன் அமைந்த சுதந்திரம் இன அழிப்புக்கான வேட்டு என்பதை உணர்ந்த கனக்கி தரப்பு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதேவேளையில் பிசானியின் திட்டத்தை கல்டோஸ்கள் வன்மையாக எதிர்த்து - இத்திட்டம் கனக்கிகள் கையில் நாட்டை ஒப்படைப்பதற்குச்சரி என்ற அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிரச்சனைக்கான சரியான தீர்வை பிசானியின் இத் திட்டம் தராது. மசூரே படுகொலைக்கான தடத்தைத் தீட்டிய சூத்திரதாரி பிசானியே என்று கனக்கி தரப்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

எலுவா மசூரே இறந்து ஒரு வாரத்தின் பின் 19 ம் திகதி பிரான்சு ஜனாதிபதி ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். "தீவின்மீதான **பிரான்சின்** நிலைப்பு தொடர்ந்தும் இருக்கும்" என பச்சையாகச் சொல்லியுள்ளார்.

பிரான்சிலிருந்து 1000 இற்கு மேற்ப்பட்ட ஆயுதப்படையினர் கலிடோனியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்ந்து கல்டோஸ்கள் தமது பயங்கரவாதத்தை திறம்பட இயக்கிக்கொண்டிருக்கின்றனர்.

தலைநகரான நுமெயா பிரபல உல்லாசப் பயண மையமாகும். பெரும்பான்மையான வெள்ளையர்கள் அங்குதான் வாழ்கிறார்கள். தற்போதைய பிரச்சனை உல்லாசப் பிரயாணத்துறையை வீழ்ச்சியடையச் செய்திருக்கிறது. பிரயாணிகள் வருகை 10% த்தால் சரிந்திருக்கிறது. ... இறக்குமதி முயற்சிகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை செய்திருக்கின்றனர் கோட்டல் (HOTEL) காரர். இது இவ்வாறிருக்க சோவியத் யூனியன் கருக்கிகளுக்கு ஆயுத உதவியை வழங்கியிருக்கிறது என்ற புரளியை எதிர் தரப்பினர் கிளப்பியிருக்கின்றனர். இது தொடர்பான இராஜரகத் தகவல்கள் இது வரையும் வெளிக்கிளம்பவில்லை.

பிரான்சுக்கு உலகில் பல காலனிகள் இருக்கின்றன. எனவே அது தனது சுரண்டலைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கலிடோனியாவில் பிரான்சின் சுரண்டலுக்கெதிராக வெடித்திருக்கும் போர், பிரான்சினால் சுரண்டப் பட்டுக் கொண்டிருக்கும் ஏனைய நாடுகளில் ஓர் விழிப்பை ஏற்படுத்தும்.

THE WALL STREET JAURNAL இன் அலுவலக நிருபர் ரொஜர் நிக்லஸ் என்பவர் இது தொடர்பாக கருத்து வெளியிடும் போது - "புதிய கலிடோனியாவில் தீவிரவாதிகளின் வெற்றி, ஆகக் குறைந்தது பிரான்சின் ஆளுமைக்குள் இருக்கும் கடல்கடந்த் நாடுகளில் உள்ள சுதந்திர அமைப்புக்களை ஊக்குவிக்கும்" என்று எழுதியுள்ளார்.

********* கலிடோனியா தொடர்பாக பிரான்சு எடுக்கும் நடவடிக்கைகள் அதனை ஒரு இரண்டாவது சிறிலங்காவாக மாற்றக் கூடிய அபாயத்தை உருவாக்கி வருகிறது. அளவில் மிகக் குறைந்த ஒரு தேசிய இன அழிப்பு – எத்தகைய "விலை" யைக் கொடுத்தாயினும் தடுக்கப் படவேண்டும். பசிபிக் பிராந்தியத்தின் மீதான பிரான்சு ஆதிக்கத்தின் ஆணிவேரை அறுத்தெறிய மூன்றும் உலகின் விடுதலை அமைப்புக்களின் உதவி கருக்கிகளைச்சேர வேண்டியது அவசியமாகும். ஒடுக்கப்பட்ட கருக்கிகளின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு உலகில் உள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவு கிட்டுவதும் அவர்களுடைய போராட்டம் வெல்வதும் வெகு தூரத்தில் இல்லை.

-------கே. கே. மோகன்-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பதில்

# ஈழ விடுதலையை முறியடிக்க ஏகாதிபத்திய கூட்டு முயற்சி

## ஈழ தேசிய விடுதலை முன்னணியின் (ENLF) கூட்டத்தில் தகவல்

**TELO** **EROS** **EPRLF**



ENLF கூட்டத்தில் தலைவர் தோழர் காசிலிங்கத்தின் உரை.

ஈழத்தில் இன்று கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகளுக்குப் பின்னணியாக இருப்பது சர்வதேச முதலாளித்துவச் சக்திகளின் கூட்டேயாகும். இந்தக் கூட்டினை உடைப்பதில்தான் ஈழத்தின் உண்மையான விடுதலை தங்கியிருக்கின்றது. ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் தோழர்கள் கடந்தமாதம் பாரிஸில் நடைபெற்ற - ஈழத்தில் இன அடக்குமுறைகளுக்கு எதிரான கண்டனக் கூட்டத்தில் இதனை ஒருமுகமாக ஒப்புக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் பிறப்பு – ஒரு தவிர்க்கமுடியாத தேவை என்ற புரிந்துணர்வு இன்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவருகின்றது. இத்தகைய ஒரு கூட்டுமுன்னணியின்து பிறப்பின் அடிப்படையில் தான்- ஈழம் கிடைப்பது சாத்தியம் என்பதைச் சர்வதேசரீதியில் அரசியல் அவதானிகள் கடந்த தசாப்தங்களாகத் தெரி-வித்து வந்துள்ளனர். அத்தோடு- "பெடியள் ஒற்றுமைப் பட்டாத்தான் எங்கடை பிரச்சினைகள் தீரும்" – என்றபேச்சு ஈழத்தில் பரவலாக உலவிவருகின்றது.

சாத்தியமாகுமா? – என்று அவநம்பிக்கையுடன் எதிர் நோக்கி வந்த கனவு இன்று கனிந்திருக்கின்றது. ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்றால் என்ன? அதனது நிலைப்-பாடு என்ன? இவற்றுக்கான விளக்கங்களைப் பிரஸ்தாபக் கூட்டத்தில் அறியமுடிந்தது.

அலெக்ஸாண்டர் தெருவில் நடந்த 09.03.1985 அன்று தோழர் செ. காசிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பாரீஸ்வாழ் தமிழ்மக்கள் பெருந்திரளாக திரண்டனர். 'ஐக்கியம்" என்ற காந்தம் தான் அவர்களை அந்த அளவிற்கு இழுத்து வந்தது என்பதில் சந்தேகமே இல்லை. மண்டபத்துள் நுழைந்ததுமே – "ஈழம் கிடைப்பது உறுதி; அதுவும் விரைவில்" – என்ற தெளிவு, அந்தக் கணப்பொழுதில் பலரிடம் ஏற்பட்டதையும் அறியமுடிந்தது.

ஸ்ரீலங்கா அரசின் இன அடக்குமுறைகளுக்குப் பலியான ஈழமக்களுக்காக விடுதலை முன்னணி, கூட்ட ஆரம்பத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியது. தோழர்களினால் ஈழப்பிரச்சினைகள் பல்வேறு கோணங்களில் வைத்து ஆராயப்பட்டன. இந்த ஆய்வுகளில் பெரும்பாலானவை அரசியல்-விஞ்ஞான பார்வையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இத்தகைய ஒரு விஞ்ஞான ரீதியான தளத்தில் நடப்பதின் மூலமே – ஈழமக்களின் உயிர், உடைமை, அழிவுகளை கூடிய-அளவுக்குத் தடுத்து – பின் நிரந்தரத் தீர்வைக் காணமுடியும் கருத்துரையாற்றிய தோழர்கள் இதனை மிகவும் தெளிவாக-வும் எளிமையாகவும் எடுத்து விளக்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ அடக்குமுறைகள் இன அழிப்பிற்கான மூலகாரணிகளில் ஒன்றாயிருந்திருக்கின்றது. 1958 ஆம் ஆண்டு முடுக்கி விடப்பட்ட அரச இராணுவ வன்முறைகள் கடந்த காலங்களில் எவ்வளவு தீவிர பரிமாணமாகியது என்பதைத் தோழர் கோணை-நாதன் "ஸ்ரீலங்கா அரசின் இராணுவ அடக்குமுறைகள்" என்ற தலைப்பில் உரையாற்றும்போது கோடிட்டுக்காட்டினார்.



ஈழமக்களின் ஆதரவு என்றுமே ஐக்கியத்திற்கே என உணர்த்தும் வகையில் குழுமிய மக்கள் கூட்டம்.

நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு எவ்வாறு திட்டமிட்டு நடத்தியது, நடத்திவருகின்றது என்பதைப் புள்ளி விபரங்களுடன் சுட்டிக்காட்டிய தோழர் சபாலிங்கம், 'இந்த ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்தும் அனுமதித்தால் எதிர்காலத்தில் பாரிய அபாயங்களை எதிர்நோக்க வேண்டிவரும்' என எச்சரித்தார். 1950 ஆம் ஆண்டளவில் நில ஆக்கிரமிப்புத் தொடங்கப்பட்டது. அன்று பட்டிப்பளை என்ற தமிழ்க் கிராமம் அம்பாறை என்று சிங்களக் கிராமம் ஆக்கப்பட்டது. இன்று திருகோணமலையை இரண்டாக்கும் முயற்சியில் அகழ்வாராய்ச்சி, மதம், தொல்பொருள் இன ஐக்கியம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையில்தான் ஸ்ரீலங்கா அரசு நில ஆக்கிரமிப்பை நடத்துகிறது— அத்தோடு நடக்கப்போவதாகவும் சவால் விட்டுக் கொண்டிருக்கிறது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச முதலாளித்துவச் சக்திகள் ஈழத்தின் மீது எவ்வாறு காழ்ப்புணர்வுள்ளன என்பதை தோழர் முகம்மத் அம்பலப்படுத்தினார். "அபிவிருத்தி என்ற பெயரில் ஸ்ரீலங்காவுக்குள் அமெரிக்கா நுழைந்திருப்பது ஒரு சூழ்ச்சி. ஈழப்பிரச்சினையைப் பயன்படுத்தி மூன்றாம் உலக நாடுகளின் அமைதியைக் குலைக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்டமிடுகின்றது. இதற்கு ஏனைய முதலாளித்துவச் சக்திகளும் உறுதுணையாக இருக்கின்றன"- எனக் குறிப்பிட்ட அவர் - "VOICE OF AMERICA வின் நிலையம் ஒன்றை அமெரிக்கா அமைக்க ஸ்ரீலங்கா அரசு தனது அனுமதியைக் கொடுத்துள்ளது. இது ஏகாதிபத்தியம் - ஸ்ரீலங்காவினுள் நுழையக் கொடுக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பம் ஆகும். இன்று இதனால் தமிழ்மக்கள் பாதிப்படைகின்றனர். நாளை சிங்கள மக்களும் இதனால் பாதிப்படைய வாய்ப்புண்டு!- என விளக்கமளித்தார்.

"மனித உயிர்கள் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தில் உள்ளன" என்று குறிப்பிட்ட தோழர் லாதீஸ் லோகநாதன் _ "ஆனால், அவை இன்று எந்த ஒரு நாட்டிலும் முறைப்படி பின்பற்றப்படுவதில்லை. குறிப்பாக ஸ்ரீலங்கா அரசு அந்தச் சாசனத்தை மீறியும் [illegible] தமிழ்பேசும் மக்களைத் தினந்தோறும் கொன்று குவிக்கின்றது" என்றார். மனித உயிர் என்றால் என்ன? அதற்குரிய உரிமைகள் எவை? என்பன பற்றித் தத்துவார்த்த முறையிலும் அவர் விளக்கினார்.

ஈழப் போராட்டத்திற்கும், சர்வதேச விடுதலைப்போராட்டங்களுக்கும் இடையிலான தொடர்புகளைத் தோழர் உமாகாந்தன் விவரித்தார். "குறிப்பாகப் புதிய கலிடோனியாவில் இன்று சூடுபிடித்திருக்கும் கனக்கிகள் போராட்டத்தினையும் — ஈழப் போராட்டத்தினையும் ஒப்பிட்டு -" முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான போராட்ட வேகத்தை சர்வதேச போராட்ட அமைப்புக்கள் என்றுமே சோர்வடைய விட்டதில்லை அத்தகைய ஒரு போராட்டமே நிக்கரகுவாவில் ஒரு புரட்சிகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோஷலிச அமைப்பை உருவாக்கியது"— என்றார்.

உண்மையான ஐக்கியம் எது? எவ்விதம் அது அமைய வேண்டும்? இதற்கான விளக்கங்களைத் தோழர் சுகன் தனது உரையில் ஆய்வு செய்தார். இயக்கங்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை ஈழ விடுதலைக்கான நல்ல அறிகுறி என்று குறிப்பிட்ட அவர் — "அந்த ஒற்றுமை ஒருமைப்பாட்டினால் ஏற்பட்டதா? என்று கேட்டார். "ஒருமைப்பாட்டின் அடிப்படையிலான ஐக்கியத்தைக் கட்டியமைக்க வேண்டியது மிகவும் அவசியம். அதற்கு நாட்கள் செல்லலாம், விடுதலை இயக்கங்களின் ஐக்கியத்தைக் குலைக்கக் குழப்பும் சக்திகளிடம் மிக அவதானமாக இருக்க வேண்டும்" என்று கூறிய தோழர் சுகன், சர்வதேச விடுதலை இயக்கங்கள் கட்டிவளர்க்கும் ஐக்கியத்தை உடைக்க ஏகாதிபத்தியங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை உதாரணங்களுடன் விளக்கினார்.

ஈழத் தேசிய விடுதலை முன்னணி பிரான்ஸில் நடத்திய முதலாவது கண்டனப் பொதுக்கூட்டம் இதுவாகும். இது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. ஈழமக்களின் இதயத்துடிப்பும், விடுதலைத்தாகமும் இன்று எவ்வளவு வேகம் பெற்றுள்ளது என்பதனை மேலும் வலியுறுத்தவும், கடல்கடந்த தமிழ்மக்களிடையே ஒரு ஒற்றுமைப் பாலத்தை அமைக்கவும் உதவியது. அத்தோடு ஒரு புதிய சிந்தனைப் பிரகாசத்திற்கும் வழிவகுத்தது.

இக்கூட்டத்தில் நிதி சேர்க்கப்பட்டபோது 1000 F க்கு மேல் வசூலாகச் சேர்ந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி கூட்டமுடிவில் தோழர் சிவதாஸ் நன்றியுரையாற்றினார்.

— சவுந்தர் —

---

தோழர்களே,

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) வழங்கும் ஈழச்செய்திகளை அறிவதற்கான தொலைபேசித் தொடர்பு எண் — 874-60-43.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவும் மேற்கத்தேய ஜனநாயகமும்



அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் தென்னாபிரிக்காவின் ஒடுக்கப்பட்ட மக்கள்....

உலகின் அதி பிற்போக்கான அதிகாரவெறியும், நிறவெறியும் கொண்ட ஆட்சி தென்னாபிரிக்காவில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 24 மில்லியன் கறுப்பு இனமக்களும் 3.4 மில்லியன் கலப்பு இனமக்களும் (இவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள்) அடிமைப்படுத்தப்பட்டுள்ள தென் ஆபிரிக்காவில் 5 மில்லியன் வெள்ளையர்களும் வசித்துவருகின்றார்கள்.

இந்த 5 மில்லியன் வெள்ளையர்களுக்குப் பங்கம் வாராதவகையில் ஆட்சியை நடத்துவதே தமது நோக்கமென்று கூறிவருகின்றது தென் ஆபிரிக்க நிறவெறி அரசாங்கம். உண்மையில் 5 மில்லியன் வெள்ளையர்களைப் பாதுகாப்பதல்ல அரசின் நோக்கம். இந்த வெள்ளையர்களில் ஒரு பகுதியினரான பெரும் மூலதனக்காரர்களையும், அவர்களது சர்வதேசக் கூட்டாளிகளின் நலன்களையும் பேணுவதே தென் ஆபிரிக்க அரசின் தலையாய கடமையாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாண்மை கறுப்பு இனமக்களைச் சுரண்டுவதற்கும், அவர்களது நாட்டினைக் கொள்ளையடிப்பதற்கும், நிறவெறியை தூண்டிவருகிறது தென் ஆபிரிக்க அரசாங்கம். 5 மில்லியோன் வெள்ளையர்களை நிறவெறியைத் தூண்டுவதன் மூலம் கறுப்பு இன மக்களுக்கு எதிராக திசைதிருப்பி தனது ஆட்சிக்கு இந்த 5 மில்லியன் வெள்ளையர்களின் ஒட்டுமொத்த ஒத்துழைப்பை பெறுவதே அரசின் நோக்கமாகும்.

3.4 மில்லியன் கலப்பு இனமக்களை இதுநாள் வரை கடுமையாக ஒதுக்கிவைத்துள்ள அரசாங்கம் தற்போது புதிய-தொரு தந்திரோபாயத்தை வகுத்துள்ளது. இதன் பிரகாரம் இந்த 3.4 மில்லியன் மக்களுக்கான இரண்டாவது பாராளுமன்றமொன்றை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் கலப்பு இனமக்களை கறுப்பு இனமக்களுக்கு எதிராக ஏவிவிட்டு அந்த நெருப்பில் குளிர்காய்வதே நிறவெறிபிடித்த அரசாங்கத்தின் நோக்கமாகும்

<u>அமெரிக்க நலன்கள்.</u>

இந்த நிறவெறி அரசாங்கத்தின் பாதுகாவலன் வேறு யாருமல்ல - ஜெயவர்த்தனவின் பாதுகாவலனான அமெரிக்க ஏகாதிபத்தியமேதான். அமெரிக்க நிறுவனங்கள் 2.3 மில்லியன் டொலர் மூலதனத்தை தென் ஆபிரிக்காவில் இட்டுள்ளன. அமெரிக்க வங்கிகளும், பங்குகளும் கணக்கிடப்பட்டால் 14 மில்லியன் டொலர்கள் மூலதனம் தென ஆபிரிக்காவில இடப்பட்டுள்ளது. இந்த மூலதனத்தைப் பாதுகாக்கவும், கறுப்பு இனத் தொழிலாளர்களைத் தொடர்ச்சியாகச் சுரண்டவும் தனது இராணுவதளங்களை ஸ்தாபப்படுத்தவும் தென்னாபிரிக்க அரசைப் பாதுகாத்து வருகின்றது அமெரிக்க ஏகாதிபத்தியம்

இந்த ஆக்க வெறிகொண்ட அரசாங்கத்தைப் பற்றி கறுப்பு இனப்பெண்மணியும், பத்திரிகையாளருமான லில்லியா வொலன் ஷோவர் குறிப்பிடுகையில் "எனது கணவர் வெள்ளையராக இருந்தும் கூட இன்றுவரை புகையிரதத்தில் நான் எனது கணவருக்குப் பக்கத்து இருக்கையில் அமர முடியாது" எனக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ்

1960 களின் தொடக்கத்தில் தென் ஆபிரிக்க மக்களின் விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (AFRICAN NATIONAL CONGRESS) தடை செய்யப்பட்டது. அதன் தலைவரான நெல்சன் மண்டேலாவும், தோழர்களும் தென் ஆபிரிக்க அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நெல்சன் மண்டேலாவின் தோழரும், வெள்ளை இனத்தவருமான டென்னிஸ் கோல்ட்பேக் என்பவரும் சிறையிடப்பட்டவர்களில் ஒருவராவார். மார்ச் 85 இல் விடுதலை செய்யப்பட்ட இவர் தென் ஆபிரிக்காவிலிருந்து வெளியேறி இஸ்ரேலிலுள்ள தனது மகளுடன் சேர்ந்து கொண்டார். அங்கிருந்து அவர் வெளியிட்ட அறிக்கையில், தென்னாபிரிக்காவிற்கு எதிராக சர்வதேசப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென்றும், அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் உதவிகள் நிறுத்தப்படவேண்டுமென்றும் கோரியுள்ளார்.

## ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 418

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 1977 இல் நிறைவேற்றப்பட்ட 418 வது தீர்மானமானது தென்னாபிரிக்காவிற்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யவோ, இறக்குமதி செய்யவோ கூடாது எனத் தனது உறுப்பு நாடுகளுக்கு நிபந்தனை விதித்தது. சர்வதேசரீதியாகச் சமாதானத்தைப்பற்றியும், ஜனநாயகத்தைப்பற்றியும் பெரிதாகப் பிதற்றிக்கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் மேற்கு ஐரோப்பியக் கூட்டாளிகளும் ஐ. நா. பாதுகாப்பு சபையின் 418 வது தீர்மானத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு அதி நவீன, அதிபயங்கர ஆயுதங்களைத் தென்-ஆபிரிக்க அரசாங்கத்திற்கு விநியோகித்து வருகின்றன.

## ஜனநாயகத்தின் மரண ஊர்வலம்:

KAJ NARUP என்ற டென்மார்க் கப்பல் தலைவருக்கும், அவரைப் பதவிக்கு அமர்த்திய கப்பல் நிறுவனத்தின் உரிமையாளரான ANDRES JENSAN என்பவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் தென் ஆபிரிக்கா வுக்கு ஆயுதங்கள் எவ்வாறு அனுப்பப்பட்டன என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளன.

"Tine Maru" என்ற கப்பலில் பணியாற்றிய Kaj Narup என்பவர் டென்மார்க்கில் நடைபெற்ற விசாரணையில் பின்வருமாறு கூறினார் "தென் ஆபிரிக்காவிற்கு ஆயுதம் ஏற்றிய எனது கப்பல் ஒவ்வொரு முறையும் பிரெஞ்சுத் துறைமுகமான போர்தோ (BORDEUX) இல் இருந்து புறப்பட்டது. இக்கப்பல் பிரான்சின் மிகப்பெரிய முதலாளியான Bob Denard இன் ஆயுதவிற்பனைக்குப் பயன்படுத்தப்பட்டது. நேரடியாக தென் அமெரிக்காவிற்கு கப்பல் அனுப்பப்பட்டு பின்னர் தென் ஆபிரிக்காவிற்கு அனுப்பப்பட்டன.

KAJ NARUP பல முறைகள் நடைபெற்ற ஆயுத விற்பனைகளைப்பற்றி வாக்குமூலம் அளித்திருந்தார். ஒருமுறை ஜூலை 23, 1981ம் ஆண்டு போர்தோ (BORDEUX) துறைமுகத்திலிருந்து புறப்பட்ட தனது கப்பல் முதலில் ஆர்ஜன்டீனாவிற்குச் சென்று பின்னர் 3.10.81 இல் தென்னாபிரிக்காவின் துறைமுகத்தை அடைந்ததாகக் குறிப்பிட்டார். BARBADOS சர்வதேசக் கண்காணிப்பிலிருந்து தப்புவதற்காக ஆயுதங்களை நிரப்பிய கப்பல்கள் முதலில் தென் அமெரிக்காவின் ஆர்ஜன்டீன போன்ற நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு பின்னர் தென்னாபிரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன என்பது விசாரணை மூலம் தெரியவந்தன.

இது பற்றி பிரான்சின் பாதுகாப்பு அமைச்சர் சார்ஸ் ஹென்று (CHARLES HENRU) விடம் விளக்கம் கேட்டபோது அவர் எதுவித விளக்கத்தையும் அளிக்கத் தவறிவிட்டார். பிரெஞ்சு ஆயுதங்கள் போர்தோ (BORDEUX) துறைமுகத்தில் வைத்து அடிக்கடி தென் ஆபிரிக்காவிற்கு அனுப்பப்படுவது மறைக்கமுடியாத உண்மை என்பதை "AFRIC ASIA" உட்பட பல முற்போக்குப் பத்திரிகைகள் தேசியவாரியாகப் பிரசுரித்தன. பிரெஞ்சு ஜனநாயகத்தின் முகத்திரை கிழிக்கப்பட்டது.

--->


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 இலிருந்து 1983 இறுதிவரையில் சர்வதேச சட்டத்திற்கு விரோதமான முறையில் 60 கடவைகள் ஆயுதங்கள் டென்மார்க் கப்பல்களின் மேலம் தென் ஆபிரிக்காவுக்கு விநியோகிக்கப்பட்டது தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ANDRES JENSON என்ற டென்மார்க் பிரஜையின் கப்பல் நிறுவனமே இந்தக் கீழ்த்தரமான ஆயுதக் கடத்தலை நடத்தியது விசாரணையின் போது கண்டு பிடிக்கப்படவே தனது சொத்துக்களைச் சுருட்டிக்கொண்டு ANDRES JENSON தலைமறைவாகினர். இவர் தற்போது தென் ஆபிரிக்காவில் வசித்துவருவதாக நம்பப்படுகிறது.

ஜனநாயகத்தைப்பற்றி அதிகம் பீற்றிக் கொள்ளும் டென்மார்க் அரசாங்கம் ANDRES JENSON ஐ விசாரணையின் நிமித்தம் கைது செய்யவில்லை. அவரது சொத்துக்கள் அரசாங்கத்தினால் தடுத்துவைக்கப்படவில்லை. அவரது கடவுச்சீட்டு அரசாங்கத்தினால் பறிமுதல் செய்யப்படவில்லை. ஆனால் அவர் நாட்டைவிட்டுவெளியேறியதும், அவரை உலகின் எந்தப்பகுதியில் இருந்தாலும் கைதுசெய்யும்படி INTEPOl இற்கு அறிவித்துள்ளதாகக் கூறிக் கண்துடைப்பு நடத்துகிறது 'ஜனநாயக' டென்மார்க் அரசாங்கம். இன்று ஐரோப்பாவில் தேடப்படும் மிக முக்கிய நபர் ANDRES JENSON என்று சப்புக்கொட்டுகிறார் டென்மார்க் நீதி அமைச்சர் Peter Rhedin.

— ரா. மனோகரா —

இக்கட்டுரை அடுத்த இதழில் தொடரும்....

தோழர்களே,

தமிழ் முரசுடன் சகல தொடர்புகட்கும்....

THE EDITOR
'TAMIL MURASU'
TAMIL EELAM LIBARATION COUNCIL (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.
FRANCE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்கா மக்களே! அடிமை விலங்குகள் இப்போது உங்கள் கரங்களை நோக்கி....

சிறீலங்கா மக்களே! நேற்றுவரை ஈ.ழ மக்களின் கரங்களை உங்கள் அரசுகள் விலங்குகளால் பிணைத்தபோது நீங்கள் வாளாவிருந்திருக்கலாம். ஆனால் இன்று அடக்குமுறையாளர்களின் அடிமை விலங்குகள் உங்கள் கரங்களைப் பிணைக்க வருகின்றனவே. என்ன செய்யப் போகிறீர்கள்? ஈ.ழ மக்களைப் போன்று புரட்சிகரப் போராட்டத்தைத் தொடங்கப் போகிறீர்களா அல்லது அடிமைகளாக வாழ்வதே மேல் என அடங்கியிருக்கப் போகிறீர்களா?

காலாகாலமாக இனவாத மாயையிலேயே உங்கள் கண்களை மறைத்தே உங்களை அடிமையாட்டச் சுரண்டி வந்தது ஆளும் ஐ.தே.க. அரசு. இன்று உங்கள் நிலையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இந்த உலகின் அதிக கடனாளியான மக்கள் நீங்கள். வறுமைக் கோடு உங்களை முந்தவிட்டே உள்ளது. அடக்குமுறைச் சட்டங்கள் உங்கள் கைகளைப் பிணைத்து வாய்களை மூடி உள்ளது.

சிறீலங்காவின் மாணவர்களது உரிமைகளுக்கு பெயர்பெற்ற பல்கலைக்கழகத் திருத்தச் சட்டமோ இன்று உங்கள் மாணவர்களைக் கொன்றொழிக்கச் செய்கின்றது. விளைவு 200க்கும் மேற்பட்ட பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டுள்ளன. பல்கலைக் கழகங்களும் கூட. போராட்டம் நடத்திய உங்கள் மாணவர்கள் அரசபடைகளால் கோரமாகத் தாக்கப்பட்டு நாலாவது மாடியில் (இது நேற்றுவரை தமிழ் பேசும் மக்களாகிய எமக்கே சொந்தமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது.) தம் சித்திரவதைக்குள்ளாகின்றனர். வேலை நிறுத்தம் செய்ய முற்பட்ட தொழிலாளரின் கருத்துக்கள் அடக்குமுறை அரசினால் அடுக்கடுக்காக கொண்டுவரப்பட்ட நடைச் சட்டத்தால் நெரிக்கப்பட்டு தொழிற்சங்க உரிமைகள் நசுக்கப்படுகின்றன. சிறீலங்கா மக்களே உங்களுக்குத் தெரியாமலே உங்களை சம்பளப்பணத்தில் அரசின் ஆயுதக் கொள்வனவுக் கான நிதி வெட்டப்படுகிறது.

விலைவாசிகளோ வானுயர, வாழ்க்கைத்தரமோ அதல பாதாளத்தில், வொய்ஸ் ஒவ் அமெரிக்கா போன்ற ஒலிபரப்புச் சாதனங்களால் உங்கள் சோசலிசத்துக்கு சமாதி கட்டப்படுகிறது, உங்கள் மண் அந்நியருக்கு அடைமானமாக்கப்படுகிறது; வர்த்தக வலயத்தில் உங்கள் பெண்களின் இரத்தமும் வியர்வையும் ஏகாதிபத்திய சுரண்டலாளர்களுக்குப் பன்னீராகின்றன. உங்களுக்கு வாக்களிக்கும் உரிமைகள் இல்லை. நீங்கள் வாக்களித்தவர்களுக்கோ வாய்திறக்கும் உரிமை இல்லை.

தர்மத்தையும், சோசலிசத்தையும் பேசிப் பேசி உங்களை அடிமைப்படுத்திவிட்ட அடக்குமுறையாளருக்கெதிராக போர்க் கொடியை உயர்த்துங்கள் சிறீலங்கா மக்களே! சமத்துவத்தை, வென்றெடுக்க அணி திரண்டு நிற்கும் ஈ.பு.மக்களின் உதாரணமாகக் கொண்டு உங்கள் போர்க் கொடியையும் உயர எடுங்கள் சிறீலங்கா மக்களே. வெற்றி கிட்டும் வரை விரைந்து போராடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## பிரான்சு :

### அரசியல் குழப்பத்திலுள்ள பிரான்சு.

% of votes cast in first round of cantonal elections on March 10th




உள்ளூராட்சி தேர்தலின் முதல் சுற்று வாக்களிப்பு விபரம்.

முதலாளித்துவ அரசியல் அமைப்பு முறையில் கட்டப்பட்ட அமைந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியாரம் பிரான்சின் எதிர்கால அரசியல் உறுதிப்பாட்டைக் கேள்விக்குறிக்கு உள்ளாக்கியுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற கன்ரோனல் எனப்படும் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஆளும் சோசலிசக் கட்சிக்குப் பாதகமாக இருந்தபோதிலும் வலதுசாரி எதிர்க் கட்சிகட்கும் கிடைத்த வெற்றி உறுதியானதாகத் தெரியவில்லை. இத்தேர்தல்களில் சோசலிசக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் கடந்த ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல்களில் பெற்ற வாக்குகளைவிட அதிக வாக்குகளைப் பெற்ற போதிலும் இத்தேர்தலில் வலதுசாரிக் கட்சிகளே பெரும்பான்மை இடங்களைப் பெற்றன. அதே வேளையில் இனவாதக் கருத்தைக் கக்கும் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணி பெற்ற வாக்குகளின் வீதமும் சென்ற தேர்தலைவிட இம்முறை குறைந்துள்ளது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள அரசியல் உறுதிப்பாடின்மை அடுத்த வருடம் நடக்கப்போகும் தேசிய மன்றத்திற்கான பொதுத் தேர்தல் குறித்து பெரும் கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் இத்தேர்தல்களில் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியுடன் எந்தக் கூட்டையும் தாம் வைக்கப் போவதில்லை என்று எதிர்க் கட்சியினர் அறிவித்துள்ளபோதும், சரியான பொருளாதார, அரசியல் திட்டங்களை மக்களின் முன்னிலையில் வைக்காத எதிர்க்கட்சிகளின் குறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும், எதிர்க்கட்சித் தலைவர்களான சிராக், ஜிஸ்கார்ட், ரேமண்ட் பார் ஆகியவர்களிடையே ஏற்பட்டுள்ள இழுபறிப் பதவி காரணமான பிளவு ஆகியன மீண்டும் பதவிக்கு வரும் ஆளும் சோஷலிசக் கட்சிக்குத் தாண்டியுள்ளதுடன் தேர்தலில் தற்போதைய முறைகளை மாற்றி விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தவும், தமது சோசலிசக் கொள்கைகளை மாற்றிய வலதுசாரிக் கொள்கைகட்கு நகர்த்துவதற்கான வேலைகளையும் சோசலிசக் கட்சி பரிசீலிக்க ஆரம்பித்துள்ளது. இருந்தபோதிலும் இம்முயற்சியை சோசலிசக் கட்சியின் ஒரு பிரிவினர் பகிரங்கமாக வெறுர்த்து வருகின்றனர். விகிதாசாரத் தேர்தல் முறை இனவாதத்தைக் கக்கும் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியை பாராளுமன்றத்தினுள் நுழையவிடும் நிலைவாயில் ஆகிவிடும் என்பதே இவர்கள் கூறும் காரணமாகும். இத்தகைய சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் அரசியல் சாதுர்யம் வாய்ந்த பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரானின் அடுத்த அசைவு என்ன என்பதே தற்போது பிரெஞ்சு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

## லெ பென்னின் முகமூடி கிழிகிறது.



தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியின் தலைவரும் பிரான்சின் அதி உக்கிர இனவெறியருமான லெ பென் அல்ஜீரியப் போரின் போது பிரெஞ்சுப் படையிலிருந்து அல்ஜீரிய விடுதலைப் போராளிகளுக்கு இழைத்த கொடுமைகளை 'லிபரேசன்' எனும் பிரெஞ்சுப் பத்திரிகை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. கொடிய சித்திரவதைகள், போராளிகளை துடிக்கத் துடிக்க கொலை செய்தமை ஆகிய அக்கிரமங்களை லெ பென் புரிந்துள்ளதாக ஆதாரங்களுடன் விளக்கி செய்தி வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு ஜேர்மனி:




### வேவு பார்த்த அமெரிக்க இராணுவ அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆயுதப் பரிகரணம் கட்டுப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள வேளையில் மீண்டும் சோவியத் யூனியனுக்கு அந்தரங்க கெட்ட பேச்சுவார்த்தைக்கு இடை நிறுத்த முயன்ற அமெரிக்கச் சதி இம்முறை படுதோல்வியடைந்துள்ளது. கடந்த முறை கொரிய விமானச் சூட்டுச் சம்பவத்தை இந்த வகையில் இம்முறை பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் கிழக்கு ஜேர்மனியிலுள்ள சோவியத் இராணுவத்தளத்தை வேவு பார்க்க ஆர்தர் நிக்கல்சன் என்ற இராணுவ அதிகாரியை அனுப்பியது. தடை செய்யப்பட்ட பகுதியில் சோவியத் இராணுவத்தின் நவீன கருவிகளை புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தபோது மேற்படி இராணுவ அதிகாரி சோவியத் துருப்புக்களால் சுட்டுக் கொல்லப்பட்டான். ஆரம்பத்தில் சோவியத் துருப்புக்கள் இந்த மீதி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டிய அமெரிக்க ஏகாதிபத்தியம் சோவியத் யூனியன் ஆதாரங்களைக் காட்டியவுடன் வாயை மூடிக் கொண்டது. சோவியத் யூனியனுக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய ஆக்கிரமிப்பு திட்டமிடல் சதியின் ஒரு அம்சமே இது.

## டியகோகார்சியா:

### இந்து சமுத்திரத்திலும் அமெரிக்க ஏவுகணைகள்.

உலகை போர் அபாயத்தில் சிக்கச் செய்வதற்காக உலகின் பல பாகங்களில் நிலை கொள்ளச் செய்யப்பட்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவுகணைப் பீதி இந்து சமுத்திரத்தையும் சூழ்ந்துவிட்டது. டியகோகார்சியா தளத்தில் நடுத்தர வீச்சு ஏவுகணைகளை நிலை கொள்ளச் செய்யத் தொடங்கிவிட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் பேர்சிங் மற்றும் க்ரூஸ் தாக்குதல் ஏவுகணைகளையும் நிறுத்தத் திட்டமிட்டிருக்கிறது. அது மட்டுமல்ல ஏற்கனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 கோடி டொலர்களுக்கு மேல் கூடுதலாக 65 கோடி டொலர்களை ஒதுக்குமாறு றேகன் நிர்வாகம் காங்கிரஸைக் கோரியுள்ளது. அதுமட்டுமல்ல இந்து மாகடலில் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களும், 'டைரஹன்' ரக நீர்மூழ்கிக் கப்பல்களும் சுற்றிக்கொண்டிருக்கின்றன. பி.52 கேந்திரத் தாக்குதல் விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் படைகளை ஏகாதிபத்தியம் நகர்த்தியதன் நோக்கம் தென்மேற்கு ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு எதிராகச் செயற்படவே எனக் கருதப்படுகிறது.

**லெபனான்:**

## லெபனானில் இஸ்ரேல் வெறியாட்டம்.



ஆயிரக்கணக்கான பாலஸ்தீனிய மக்களின் இரத்தத்தில் தமது கைகளை நனைத்துக் கொண்ட சியோனிச வெறி நாய்கள் லெபனானில் 'IRON FIST' எனும் நடவடிக்கையின் கீழ் மனிதவதைகளை ஆரம்பித்து உலகின் மனித நாகரிகத்துக்கே சவால் விட்டுக் கொண்டிருக்கின்றனர். ஈழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிங்கள வெறி நாய்களுக்கு போதித்த அதேபாடத்தை அவர்களது சியோனிச எஜமானர்கள் லெபனானில் நடைமுறைப்படுத்தி பூமியை இரத்தத்தால் நனைக்கத் தொடங்கியுள்ளனர். இஸ்ரேலிய வெறி நாய்களின் தாக்குதல்கள் நூற்றுக்கணக்கான அப்பாவி லெபனான் மக்களின் உயிர்களைப் பலிவாங்கியுள்ளது. ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டதுடன் பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பொருட்கள் நாசப்படுத்தப்படும் உள்ளன. பெண்கள், குழந்தைகள் உட்பட அண்ணளவாக நூறு பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அங்கிருத்தின் உச்சக்கட்டமாக சியோனிஸ்டுகளின் வெறியாட்டத்தைப் படமாக்கிக் கொண்டிருந்த CBS தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதையொத்த படுகொலைகளை ஈழத்தில் சிறிலங்கா இராணுவம் புரிந்து வருவது தெரிந்ததே.

## நிக்கரகுவா:

### சமாதானத்துக்கு நிக்கரகுவா அரசு அழைப்பு ஆனால் எதிர்ப்புரட்சியாளர்களோ படுகொலைகளில்.

மத்திய அமெரிக்கப் பிரதேச அமைதிக்குச் சமாதான நடவடிக்கையில் ஈடுபடவும், 'கொன்ரடோரா' குழுவின் தீர்மானங்களை தான் ஏற்றுக்கொள்ளத்தயாராக இருப்பதாகவும், நாட்டிலுள்ள கியூப இராணுவ ஆலோசகர்களைத் திருப்பியனுப்பத் தயாராகவுள்ளதாகவும், மேலதிக ஆயுதக் கொள்வனவை நிறுத்துவதாகவும் தனது சமாதான விருப்பக் கொள்கைகளாக நிக்கரகுவா அரசு அறிவித்துள்ள போதும் மேற்படி புரட்சிகர அரசைக் கவிழ்க்கும் சதிகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் முடுக்கிவிடுகின்றது. தனது கைக்கூலிகளான நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளர்களுக்கு 14 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்க வேண்டும் என்று றேகன் தொடர்ந்து காங்கிரசை வற்புறுத்தி வரும் அதேவேளையில் றேகன் 'அன்புச் சகோதரர்கள்' என்றும் 'விடுதலைப் போராளிகள்' என்றும் அழைக்கப்படும் எதிர்ப்புரட்சியாளர்கள் தொடர்ச்சியாக அப்பாவி மக்களைக் கொலை செய்தும், அவர்களது உடைமைகளைக் கொள்ளையடித்தும், பெண்களைக் கற்பழித்தும், பயிர்களை நாசம் செய்தும் வருவதாக அமெரிக்காவில் உள்ள சுதந்திரமாக இயங்கும் மனித உரிமைகள் ஸ்தாபனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. சமீபத்தில் நிக்கரகுவாவில் சுகாதார சேவையில் ஈடுபட்ட மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த இரு இளம் பெண்கள் எதிர்ப்புரட்சியாளர்களால் கடத்தி கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா:

### இந்தியாவில் சி.ஐ.ஏ.யின் சதிகள் தொடர்கின்றன.

திருமதி. இந்திரா காந்தியின் படுகொலை, இந்தியாவில் தூண்டப்பட்ட இனக்கலவரங்கள் இவற்றின் பின்னணியில் இருந்த சர்வதேச சதியாளர் சங்கமான சி.ஐ.ஏ இம்முறை தனது சதியை சோவியத் யூனியனுக்கெதிராக இந்திய மண்ணில் கட்டவிழ்த்துள்ளது. இச்சதித்திட்டத்தின் கீழ் இந்தியாவிலுள்ள சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த இராஜதந்திரி கிரிசென்கோ கொல்லப்பட்டு அவரது மனைவி காயப்படுத்தப்பட்டார். அதேபோல மேற்படி சோவியத் தூதரகத்திலிருந்து காணாமல் போய் அமெரிக்காவில் புகலிடம் பெற்றுள்ள இகோர் கிஜா தொடர்பான சம்பவத்திற்கும் சி.ஐ.ஏ.-வே காரணம் எனக் கருதப்படுகிறது.

### "இந்தியப் பாதுகாப்புக்கு பாகிஸ்தானால் ஆபத்து!" — இந்தியப் பாதுகாப்பு அமைச்சர்.

'பாகிஸ்தான் தனது தேவைக்கு அதிகமாக நாசகார ஆயுதங்களைப் பெற்று வருவதுடன் நவீன ஏவுகணைகளையும், F-18 போர்விமானங்களையும் பெற இருக்கிறது. அமெரிக்காவிடம் மேலும் நவீன ரக ஆயுதங்களைப் பெற பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. இவற்றினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு, பாகிஸ்தானால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது' என இந்தியப் பாதுகாப்பமைச்சர் திரு. நரசிம்மராவ் எச்சரிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கையில் இலங்கையில் இஸ்ரேலினதும், பிரிட்டனினதும், அமெரிக்காவினதும் அதிகரித்த செயற்பாடுகள் குறித்து இந்தியா உன்னிப்பாக இருப்பதாகவும் இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் பெருமளவில் வருவது நிலைமைகளை மேலும் உக்கிரமடையச் செய்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வங்காள விரிகுடாவில் இந்தியக் கடற்படை யுத்த ஒத்திகை!

வங்காள விரிகுடாவில் இந்தியக் கடற்படை யுத்த ஒத்திகை ஒன்றை நிகழ்த்தியுள்ளது. இவ்வொத்திகையில் இந்தியாவின் அதி நவீன கடற்படைச் சாதனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நீண்ட நேர இந்த ஒத்திகையை இந்தியப் பாதுகாப்பமைச்சர் பார்வையிட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிவப்புக் கவிதை

அந்த இரவின் மௌனத்தில்
இந்த வீரர் பயணச் சிப்பங்களோடு
மெதுவும் விரைகிறார்கள்
வேகமான காவல் - ஆனாலும்
மிருதுவாக!
இவர்களைப் பாதுகாக்கும்
விவசாயிகளின் துக்கம் கவலையை
இந்த வீரர்கள் விரும்பவில்லை
மாறுகாட்டாகி
வைகறை வெளுத்தது!
விழித்தெழுந்த கிராமவாசிகள் - ராவை
வீரர்கள் சென்றிருப்பதைக் கண்டுகொண்டனர்!
எல்லாக் கண்ணீர்த் தொட்டிகளும் நிரம்பி வழிந்தன!
எல்லா வாசல்களும் கூட்டப்பட்டிருந்தன!
வெள்ளையடிக்கப்பட்டிருந்த சுவரில் தெரிந்த
துண்டுக் காகிதம் சொன்னது -

## நன்றி! போய்வருகிறோம்!

- வாங்-ஜி-ஹியாங் -

---

"நாம் மக்கள் மத்தியில் தீவிரமாக அரசியல் வேலையில் ஈடுபட்ட போதுதான் மார்க்சிச மெய்யியத்தை அறிந்து கொண்டோம், அதைக் கற்றுக் கொண்டோம், தெளிவாகப் புரிந்து கொண்டோம்."

- தோழர் க. பத்மநாபா -

# கிழக்கில் ஒரு விளக்கு


## கம்பூச்சியா

கண்ணீரையும் இரத்தத்தையும் விதைத்து புரட்சிப் பூக்களை மலரச்செய்து தென்கிழக்கு ஆசியாவில் புரட்சிவிளக்கை ஏற்றி வைத்து இருக்கும் இந்தக் கம்பூச்சியா திரும்பவும் முதலாளித்துவப் பத்திரிகைகளின் செய்திகளில் முக்கிய இடத்தைப்பிடித்து இருக்கின்றது.

கம்பூச்சிய மக்கள் ஒரு புதுவாழ்வைக் கட்டி அமைத்து வருகின்றனர். அவர்களை எதிர்த்து முன்பு பிரஞ்சு ஏகாதிபத்தியமும் பின்பு ஐந்து ஆண்டுகளாக அமரிக்க ஏகாதிபத்தியமும் பின்பு கொடியவன் பொல்பொட்நரவேட்டைக் காரனும் மிக பெரிய யுத்தங்களைத் தொடுத்தனர். இயல்பாகவே போர்க்குணமும் வீரமும் மிக்க மக்கள் உண்மையான சுதந்திரத்தைப்பெற்று மெல்ல மெல்ல மீட்சி பெற்று வருகின்றனர். சகஜ வாழ்வைநோக்கிச் செல்லும் மக்கள் – அவர்களது முன்னேற்றம் ஆகியவற்றை கண்டு உலகெங்கும் உள்ள மக்கள் உவகை கொள்கின்றனர். ஆனால் தென்கிழக்கு ஆசியாவில் பின்னுக்குத் திருப்பித் தள்ளமுடியாத மாற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாத வாஉஷிங்டனும் பீக்கிங்கும் செய்வதறியாது திணறுகின்றன. கம்பூச்சிய மக்களின் அபிவிருத்தியைக் குலைக்கவும் அந்த மக்கள் தூக்கியெறிந்து விட்ட கொலைகாரர்களின் அல்லது அவர்களுக்கும் முன்பு இருந்த நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களின் தலைகளை மீண்டும் திணிக்கவும் தீவிர முயற்சிகள் செய்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகுடைந்த முதலாளித்துவ அமரிக்காவும் சீன மேலாதிக்கவாதிகளும் மற்றும் மேற்கத்தய ஏகாதிபத்திய நாடுகளும் கம்பூச்சிய மக்களால் துரத்தியடிக்கப்பட்டு இன்று இந்த நாட்டின் மேற்கில் இருக்கும் தாய்லாந்து எல்லையில் மூன்று பிரிவாய் இருக்கும் எதிர்ப் புரட்சியாளர்களது துணையுடன் தொடர்சியாய் கம்பூச்சியாவுக்குள் ஊடுருவல் செய்கின்றனர்.




கொடுங்கோலன் பொல் பொட்டின் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட கம்பூச்சிய மக்களின் எண்ணிக்கையோ 20 இலட்சத்துக்கும் மேல். இத்தனை மக்களின் இரத்தத்தில் கை நனைத்த கயவர்களை 'விடுதலைப் போராளிகள்' என்கிறது ஏகாதிபத்தியமும் அதனது ஏவல் நாய்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வீரமிகு மக்களைக் கொண்ட கம்பூச்சியாவின் வரலாற்றையும் அதன் இன்றய நிலைப்பாட்டையும் ஆராய்வதும் அறிவதும் புரட்சித் தீயில் காயும் ஈழ மக்களுக்கு தேவையானதாகும். தொன் நெடுங்கால நாகரிகத்தையும் முன்னேறிய கலாச்சாரத்தையும் கொண்ட இந்தோ சீனாவின் மூத்த நாடான இந்த நாடு 1976 வரை கம்போடியா என அழைக்கப் பட்டது. "கிமொர்" மக்களின் தொகை 1977 இல் 80 இலட்ச்சமாகும். கிழக்கில் வியட்நாமையும் மேற்கில் தாய்லாந்தையும் வடக்கில் லாவோசையும் தெற்கில் சயாம் வளைகுடாவையும் தனதுஎல்லைகளாகக் கொண்டது, கம்பூச்சியா தென் இந்தயாவுடன் இரண்டாயிரம் ஆண்டுகள் தொடர்புகொண்ட நாடாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தென் இந்தியாவில் இருந்து அங்கு குடியேறிய மக்கள் அம்மக்களுடன் கலந்ததே இதற்குக் காரணம். "அங்கோர் லாட்" "அங்கோர் தோம்" மற்றும் நூற்றுக்கணக்கான ஆலயங்களும் இன்னும் அந்நாட்டின் புகழையும் மகோன்னதத்தையும் இந்தியத் தொடர்பையும் இன்னமும் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன. அங்கோர் லாட் ஆலயம் ஒரு உலக அற்புதமாகும். மறைந்த இந்தியப் பிரதமர் நேரு தனது "இந்திய தரிசனம்" என்னும் நூலில் "அங்கோர் ஆலயத்திற்கான உத்வேகம் இந்தியாவில் இருந்துதான் வந்தது எனினும் கிமோர் மக்களின் தத்துவம் தான் அதனை உருவாக்கியது அல்லது இவ்விரண்டும் ஒன்றுக இணைந்து இவ் அற்புதத்தை உருவாக்கின" என எழுதியுள்ளார். தொன்மையும் உயர்ந்த கலாச்சாரத்தையும் கொண்ட இந் நாட்டை பிரஞ்சு ஏகாதிபத்தியம் நூறுஆண்டுகாலமாக அடிமையாக்க முயற்சித்தது. இறுதியில் 1893 ம் ஆண்டு அன்றய கம்போடிய மன்னராக இருந்த மன்னர் தரொத் பிரஞ்சு ஏகாதிபத்தியத்துடன் ஓர் ஒப்பந்தம் எழுதினார். இது அந்த நாட்டை அடிமைத்தனத்திற்கு இறக்கி விட்டது. ஒரு பெருமைமிக்க நாகரிகத்திற்கும் கலாச்சாரத்திற்கும் வாரிசான இம்மக்கள் இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமை நிலைக்குத் தயாராக இல்லை.-பெரும் கலகங்கள் வெடித்தன. பல்வேறு பிரஞ்சு இயக்கங்கங்களும் கலகங்களும் தோன்றினும் இந்தோ சீனாவைச் சேர்ந்த மூன்று நாடுகளும், அதாவது- கம்பூச்சிய கீமோர் மக்களும் , வியட்னாம் மக்களும் லாவோஸ் மக்களும் ஒருவருக்கொருவர் உதவி செய்தும் தம் முயற்சிகளை ஒன்றுக்கியும் வந்தார்கள்: இந்த வீரமிகு போராட்டங்கள் அவற்றை தேசபக்த இளவரசர்கள் நடாத்தினும் சரி அல்லது புத்த பிட்சுகள் நடத்தினும் சரி அல்லது விவசாயிகள் சாதாரண மக்கள் கிளர்ந்தெழுந்து நடத்தினும் சரி தோல்விகளில் முடிந்திருப்பது பற்றி ஆராயப் படவேண்டியது அவசியமானதாகும். இத்தோல்விகட்கு ஒரு அரசியல் திசை வழியும் வலுவான கட்சி அமைப்பும் இல்லாமையே காரணமாகும்.

அக்டோபர் புரட்சி முடிந்த காலகட்டம்- அந்த சங்க நாதம் இந்தோ சீனாவையும் சிலிர்த்து எழச் செய்தது. பெரும் புரட்சித் தோழர் கேசியின் 1930 இல் இந்தோ சீன கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடக்கினார்.

கிமோ இஸ்ரெக் என்னும் கம்போடிய கட்சி பிரான்ஸ் ஏகாதிபத்தியத்திற்கெதிராக பெரும் தாக்குதல்களைத் தொடங்கியது. நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை விடுவித்து கொரிலாத் தளங்களை நிறுவத் தொடங்கினார். 1951 ம் ஆண்டு நடந்த கிமோர் ஐக்கிய விடுதலை முன்னணி வியட்நாமிலும் லாவோசிலும் இருக்கும் முன்னணிகளுடன் மகாநாடு நடாத்தி தங்களுக்குள் ஓர் கூட்டணி நிறுவுவது என்று தீர்மானித்தது. 1951 ம் ஆண்டு நடந்த இந்தோ சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் ஒவ்வொரு நாட்டிலும் மக்களது அபிலாசைகட்கும் யதார்த்த நிலைமைகட்கேற்ப மூன்று நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளை நிறுவுவது என்று தீர்மானித்தது. இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் வியட்னாம் படைகள் கம்பூச்சியாவிற்குள்ளும் லாவோசிற்குள்ளும் சென்றன-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வியட்நாம் மக்கள் சேனையின் வீரச் செயலாலும் கிமோர் இஸ்ரோக்கின் தாக்குதல்களினாலும் பிரஞ்சு ஆக்கிரமிப்பாளரை பல இடங்களில் படு தோல்வியடையச் செய்தது. இது பிரஞ்சு ஆக்கிரமிப்பாளரை இந்தோ சீனாவில் போர் நிறுத்தம் பற்றி விவாதிக்க ஜெனிவா மகாநாட்டைக் கூட்டச் செய்தது. ஜெனிவா மகாநாட்டிலும் கூட அமெரிக்க பிரஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் உண்மையான போராளிகளான கிமொாஸ்ஸரெக்கை விலத்தி இன்றைய பிற்போக்கு வாதியும் அன்றைய சந்தர்ப்பவாதியுமான "சிகானுக்கை" ஆதரிக்க முன்வந்தனர். சிகானுக் ஒடுக்குமுறையாளர்களுடன் ஒட்டி உறவாடி சிற்சில சலுகைக்காக கெஞ்சிக் கொண்ட வேளையில், கிமோர் இஸ்ஸரெக்கின் மக்கள் சேனைதான் மக்களது வேதனையிலும் சோதனையிலும் அவர்களோடு நின்றது என வியட்நாம் சுட்டிக்காட்டியது. ஆனால் வியட்நாமின் இம் முயற்சியை ஆதரிக்க சீனா மறுத்ததினால் கிமொர் இஸ்ஸாரெக் அம் மகாநாட்டில் பங்குகொள்ள முடியவில்லை. ஜெனிவா மகாநாட்டின் முடிவின்படி சிகானுக்கை தலைவராகக் கொண்ட அரசாங்கம் உருவாகிறது. கிமெர் இஸ்ஸெரக் கலைக்கப்பட்ட நடுநிலையான கம்பூச்சியாவின் காலகட்டம் தொடங்கியது.

ஜெனிவா உடன்பாடுகளின் மை உலருமுன் அமரிக்க சியோட்டா கூட்டணியை உருவாக்கி அதில் சம்பந்தப் பட்ட மக்களைக் கலந்துகொள்ளாமலே வியட்நாம், லாவோஸ், கம்பூச்சிய அதன் பாதுகாப்பின் கீழ் கொண்டுவந்து இந்தோ சீனாவிசல் பிரஞ்சு ஆக்கிரமிப்பாளர் காட்டிய திறமையின்மையை ஈடுசெய்த் துடியாய்த் துடித்தது. மன்னர் சிகானுக் பெரும் சந்தர்ப வாதியாக ஒருவேளை அமரிக்காவை ஆதரிப்பதும் மறுவேளை நடுநிலை நாடுகளை ஆதரிப்பவராகவும் விளங்கினார். புதிதாக விடுதலையடைந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் நடாத்திய பாண்டுங் மகாநாடு சிகானுக் நடுநிலையைப் பிடித்துவர போதிய வாய்ப்பை வழங்கியது.

---- செல்வம் ....

(இக் கட்டுரை அடுத்த இதழில் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்ப்பு

நீ என்னைச் சுற்றிக் கட்டலாம்
வாசிப்பதற்கும் புகைப்பதற்கும்
நீ தடை விதிக்கலாம்
எனது வாயில் நீ மண்ணையிட்டு நிரப்பலாம்
ஆயினும் என்ன?

கவிதை என் துடிக்கும் இதயத்தின் குருதி.
என் ரொட்டியின் உப்பு, கண்ணீரின் திரவம்
கத்தி முனையால்
அதை நான் எழுதுவேன்.

சிறைச்சாலையில்
குளியலறையில்
குதிரை லயத்தில்
நான் அதைப் பாடுவேன்.

சவுக்கடியிலும்
சங்கிலிப் பிணைப்பிலும்
கை விலங்கின் வேதனை இடையிலும்
நான் அதை பாடுவேன்.

போரிடும் எனது பாடலைப் பாட
என்னுள் ஓர் கோடி
வானம்பாடிகள் உள்ளன.

- ரசீட் ஹுசைன் -
(பாலஸ்தீனக் கவிஞன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்யூனியனின் புதிய தலைவருக்கு
# ஈழ மக்களின் புரட்சிகர வாழ்த்துக்கள்



Unite

**Mikhail Sergeevich Gorbachov**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MURASU

UNISSEZ VOUS TOUS LES TRAVAILLEURS ET LES NATIONS OPPRIMEES

MURASU- 3 OLY- 6

AVRIL - 1985

# CIVILISATION DE SRILANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL



*LE PLAN DU GOUVERNEMENT SRI LANKAIS POUR LA COLONISATION DE 200 000 SINGHALAIS DANS LA REGION DE L'EST*

*Le gouvernement Srilankais lance sans cesse le terrorisme d'état contre les innocents peuple tamoul dans tout le territoire de tamoul, c'est à dire dans la région du Nord, la région de l'Est et le département de Badulla qui est une partie du haut plateau du centre du pays.*

*Des milliers de Tamouls innocents ont été tués par le gouvernement fasciste de J.R.Jeyawardene et puis ils ont obligé les tamouls d'évacuer en laissant leurs demeures et en particulier à Mannar et la région de Mullaitivu. Le gouvernement applique une nouvelle stratégie dans le but de chasser "le terrorisme des militants" en évacuant les Tamouls, et à la place de mettre les colonies Singhalaises.*

*Le ministre de la sécurité nationale Mr.Lalith Athulad Mudali a annoncé que le gouvernement a mis un plan sur pied dans lequel 200 000 Singhalais seront implantés en tant que colonies dans les régions dites Tamoules, en vue de résoudre le problème dit "terrorisme". Les medailles du gouvernement sont frappées de suffrances et le sang des Tamouls. Le sol de la population parlent Tamoul est convoité en tant que champ de bataille par l'armée Srilankaise et le gouvernement intentionnement detruit l'identité de la nation Tamoule de Srilanka.*

*Le gouvernement de Srilanka obtient de l'aide financière des pays étrangers pour le besoin du développement du pays, mais au lieu du développement de l'aide perçue est employée pour anéantir la Nation Tamoule, en la tuant par masse et puis fait venir les Singhalais dans les régions Tamoules et enfin de supprimer les combattants pour la libération d'Eelam.*

*Alors nous demandons aux gouvernements des pays étrangers créanciers du gouvernement Srilankais de bien vouloir exercer leurs pressions sur le gouvernement Srilankais de ne plus prendre les mesures inhumaines*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE GOUVERNEMENT DE SRILANKA A ETE SANCTIONNE PAR LA COMMISSION DE DROITS DE L'HOMME A GENEVE

Dans la commission de droits de l'homme qui était tenue à Génève du février à mars '85, plusieurs représentants des divers pays ont exprimé leur indignation en ce qui concerne le non-respect des droits de l'homme de la part du gouvernement Srilankais.

Une commission formée par les juristes internationaux a soumis un rapport dans lequel figure la tuerie, exercée par la force de sécurité de Srilanka. En commentant celle-ci, des photo's ont été jointes dans la massacre des innocents le 4 décembre, 1984 à Mannar.

Un représentant de l'organisation de chaute Pakass accuse le gouvernement Srilankais de ne pas avoir recours a une solution politique pour le problème Tamoul. Le gouvernement Srilankais étouffe le problème Tamoul en le résolvant par voie militaire. Il a été aussi dit que le gouvernement Srilanka sollicite de l'aide de Mossad, une force Israëlienne ainsi que celle de la S.O.S. britanique pour faire face aux Tamouls du front de libération en les supprimant.

Le représentant d'Amnesty International accuse le gouvernement Srilankais de ne pas respecter les droits de l'homme, car celui-ci supprime la vie humaine et notamment celle de Tamouls.

Le représentant du gouvernement Indien donna un rapport détaillé portant sur l'oppression du gouvernement Srilanka, exercée sur la population Tamoule de l'île. Il ajoutait que l'intervention du gouvernement indien sera necessaire pour trouver une solution politique en ce qui concerne le problème Tamoul en Srilanka.

## 200 ECOLES SINGHALAISES FERMEES A CAUSE DE LA GREVE DES ETUDIANTS

Minister et député de l'éducation supérieure M.A.R.M.P.Athanayake a fait une déclaration à la presse le 15 mars 1985, que 200 écoles singhalaises ont été fermées à cause de la grève des étudiants. Cette protestation a été lancée par les étudiants pour montrer leurs mecontentements en ce qui concerne l'amendement

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sur la loi des universités, portant sur la non co-ordination entre différentes universités. Parmi les collèges fermés, il y a 200, la plus part d'entre eux se trouvent dans le département de Matara, Ambalangoda et Ampara.

Durant la grève des étudiants, le restaurant universitaire et quelque demeures de fonctionnaire ont été endommagés. La tension monte dans le sud comme au nord et l'est de l'île et la population donne son consentement pour combattre les mesures répressives du gouvernement.

LES FAMILLES HABITANT PRES DU CAMP D'ARMEE A GURUNAGAR ONT ETE DEMENAGES DE FORCE PAR LE GOUVERNEMENT

Plus de 29 familles ont été déménagées par force par les hommes du gouvernement qui ont leur demeure à Gurunagar dans le département de Jaffna. La raison de ce déménagement selon la porte parole du gouvernement, c'est pour éviter l'eventuel attaque des combattants de libération qui pourraient se cacher dans ces habitations, qui est en soi une publicité mensongère. Le gouvernement ne donne aucun toit pour ces familles dont leurs maisons étaient brûlées. Ce-ci signifie en claire que le gouvernement a une mauvaise intention contre la population tamoule. En les exterminant ou encore en les chassant pour mettre à leur place la population Singhalaise.

LE DEPUTES DE BRETAGNE ONT AVANCE UNE MOTION AU SEIN DU PARLEMENT BRITANNIQUE EN SIGNE DE PROTESTATION EN CE QUI CONCERNE LA VISITE PROCHAINE DU PREMIER MINISTRE BRITANNIQUE A SRILANKA

Nombreux députés britaniques protestent contre la prochaine visite du premier ministre britannique Mme.Tchatcher à Srilanka pendant que les forces Srilankaises continuent à massacrer les innocents Tamouls dans les régions Tamoules. Même l'opposition a été d'accord et la motion de censure a été déposée.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Le députés britaniques auront exprimé leurs vôtes en ce qui concerne cette visite au sein du parlement. Ce-ci dit, le gouvernement Srilankais ne pouvait cacher la vérité au monde.

## LE GOUVERNEMENT INDIEN RECLAME UNE COMPENSATION DU GOUVERNEMENT SRILANKAIS

Nombreux innocents pêcheurs Indiens ont été tués par balle par la marine Srilankaise sur les eaux territoriales d'Inde. Il y a aussi de la capture des pêcheures indiens par la marine Srilankaise et en détruisant leurs bateaux. Malgré les nombreux avertissements lancés par le gouvernement Indien du gouvernement Srilanka, ce dernier ne tient aucun compte. Le gouvernement Indien renforce sa garde de côté dans l'étroit de Palk pour sauvegarder les pêcheurs indiens.

De son côté, le gouvernement Indien reclame une compensation du gouvernement Srilankais pour les pêcheurs Indiens, tués par la marine Srilankaise.

## UNE ASSOCIATION A ETE CREEE A LYON (FRANCE) POUR LES REFUGIES TAMOULS

Le gouvernement Srilankais supprime la lutte des Tamouls pour leur libération. Nombreux Tamouls innocents ont été tués, leurs biens confisqués et leurs maisons ont été brûlées. Même de l'aide pour la nourriture et les médicaments est absente. La plus part des Tamouls meurent de faim. Quelque parmi eux ont reusi à quitter le pays pour venir en France en tant que réfugiés. La population française de Lyon a formé récement une association appellée:

"Association pour les tamouls de Srilanka"

dans le but de venir en aide des réfugiés Tamouls.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MEME LE PRETRE ETAIT REFUSE DE PENETRER DANS DANS LA PRESQU'ILE DE JAFFNA

A la fin du mois d'octobre 1984, le gouvernement de Srilanka déclare la presqu'île de Jaffna, en tant qu'une zône interdite. Les personnes entrant ou sortant de cette zône doivent obtenir une autorisation d'entrée ou de sortie d'autorité compétente. Ainsi, le gouvernement isole la presqu'île de Jaffna, sous prétexte d'un débordement de terrorisme. En effet le gouvernement disimule le vrai problème de cette région; et les Tamouls suffrent de la suppression du gouvernement.

Même le père Rev.S.M.Omb, un prêtre Hollandais servant à la diocèsse de Jaffna depuis 37 ans, a été refusé une permis d'entree pour la presqu'île de Jaffna par l'autorité compétente, malgré une permission delivrée par un agent du gouvernement de Kilinochchi, pour les cas urgents.

## LES TAMOULS PARTENT POUR L'INDE EN TANT QUE REFUGIES

Les forces de Srilanka continuent leurs tapages dans les régions Tamouls en tirant sur des personnes innocentes, detruisant des biens valereux, enlevant les femmes et en brûlant les maisons. Les Tamouls ont peur de rester dans les régions Tamoules et ils partent pour l'Inde en tant que réfugiés. Ils ont traversé par bateau l'étroit de Palk qui est à peu près 30 Km de long. Nombreux sont les morts sur la mer, car en traversant ils ont été tirés par la marine Srilankaise. Plus de 25 000 réfugiés ont traversé l'étroit de Palk pour aller en Inde ce mois de mars 1985. Le gouvernement chasse les Tamouls de leur territoire, et à la place il place des colonies Singhalaises. Ainsi le gouvernement laisse savoir au monde qu'il n'y a pas de nation Tamoule en Srilanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOMBREUX DE TAMOULS SONT DEVENUS DES REFUGIES A VANTHARAMULAI


Le 4 mars 1985, une commande de police allait en tapage à Vantharamulai dans le département de Batticoloa qui se situe dans la région est de Srilanka. La commando tirait sur des innocents Tamouls, arrêtait des jeunes tamouls et plus de 100 maisons ont été incendiées. Plus de 1000 Tamouls sont devenus des réfugiés dans cette région. Cette région était réprésentée par un ministre faisant partie du gouvernement de Srilanka. Selon la déclaration du gouvernement, cette commando a été lancée dans le but de poursuivre des militants de cette région. En réalité, le gouvernement diffuse des fausses propagandes destinées contre les Tamouls qui combattent pour la libération de leur pays.

---

**POUR TOUTES LES CORROSPONDANCES**

**L'EDITEUR**
**TAMOUL MURASU**
**CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM**
**10,RUE DES MARTYRS**
**75009-PARIS**
**FRANCE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# TERRORISME DES FORCES SRILANKAIS

PUBLIE PAR

CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org